DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 118/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 13 |
| Name | திருமதி ராஜேஸ்வரி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி பேராசிரியர், உயிர் வேதியியல் துறை,TVMCH. |
| Religion | |
| Age | |

<u>**(எதிரி ஆஜரில்லை.எதிரிகள்தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட . எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**</u>

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 20-11-2025.(நேரம்: 12.51 PM )

<u>**முதல்விசாரணை**</u>

**1.** நான் TVMCH மருத்துவமனையில் உயிர் வேதியியல் துறையில் உதவி பேராசிரியராக பணி செய்து வருகிறேன்.ங

2.இதற்கு முன்பாக TVMCH மருத்துவமனையில் அவசர சிகிட்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருக்கும்போது கடந்த 08.06.2016 ஆம் தேதி 04.05 மணியளவில் பண்டாரவிளையை சேர்ந்த தங்கபாண்டி மகன் நாராயணன் என்பவரை என்னிடம் 108 ஆம்புலன்ஸ் மூலமாக

சிகிட்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் என்னிடம் கூறியதாவது கடந்த 08.06.2016 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் குரங்கனி அம்மன் கோவில் அருகில் வைத்து இருசக்கர வாகனத்தில் சென்றபோது கார் அடித்து விபத்து ஏற்பட்டதாக கூறினார்.

3.அவரை நான் பரிசோதிதத்தில அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது சுவாசமும் ,இதய துடிப்பும் சீராக இருந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் கீழ்கண்டவாறு

1.வலது கால் முன் பகுதியில் 20x5x2 செ.மீ அளவில் எலும்பு தெரியும்படியான வெட்டு காயம் காணப்பட்டது.

2.அவரது வலது,இரண்டாவது, மூன்றாவது கால் விரல்களில் 3x1x0.5 செமீ அளவில் வெட்டுகாயம் காணப்பட்டது.

அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு அவரை உள்நோயாளியாக சிகிட்சை மேற்க்கொள்ள அறிவுறித்தினேன்.

4.கடந்த 20.06.2016 அன்று மருத்துவமனை சிகிட்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே ரிப்போர்ட் அறிக்கையின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன் **நான் வழங்கிய காய சான்று அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.**இதற்கு முன்பாக TVMCH மருத்துவமனையில் அவசர சிகிட்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருக்கும்போது கடந்த 08.06.2016 ஆம் தேதி 04.10 மணியளவில் தென்திருப்பேரையை சேர்ந்த பகவத்சிங் மனைவி சரோஜா என்பவரை என்னிடம் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிட்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் என்னிடம் கூறியதாவது கடந்த 08.06.2016 ஆம் தேதி மாலை 02.30 மணியளவில் ஏரலில் உள்ள தோட்டையன் குடியிருப்பு அருகில் வைத்து இருசக்கர வாகனத்தில்

சென்றபோது அடையாளம் தெரியாத 4 சக்கர வாகனம் இடித்து விபத்து ஏற்பட்டதாக கூறினார்.

6.அவரை நான் பரிசோதிதத்தில அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது சுவாசமும் ,இதய துடிப்பும் சீராக இருந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் கீழ்கண்டவாறு

1. அவரது முன் தலை பகுதியில் 5x1x1 செ.மீ அளவில் வெட்டுகாயம்ீ காணப்பட்டது.

2. அவரது வலது மேல் கை நடுபகுதியில் வீக்க காயம் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து உள்நோயாளியாக சிகிட்சையில் பெற அனுமதி அளித்தேன்.

அவர் 01.07.2016 அன்று சிகிட்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே அறிக்கையின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **அவருக்கு நான் வழங்கிய காயசான்று அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7.இதற்கு முன்பாக TVMCH மருத்துவமனையில் அவசர சிகிட்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருக்கும்போது கடந்த 08.06.2016 ஆம் தேதி 04.15 மணியளவில் ஏரல் , சுயம்புலிங்கசாமி தெருவை சேர்ந்த பெருமாள் மனைவி செல்வி என்பவரை என்னிடம் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிட்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் என்னிடம் கூறியதாவது கடந்த 08.06.2016 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் குரங்கனி அம்மன் கோவில் அருகில் வைத்து இருசக்கர வாகனத்தில் சென்றபோது கார் அடித்து விபத்து ஏற்பட்டதாக கூறினார்.

8.அவரை நான் பரிசோதிதத்தில அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது சுவாசமும் ,இதய துடிப்பும் சீராக இருந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் கீழ்கண்டவாறு

1. அவரது வலது முன் கை பகுதியில் 4x3x0.5 செ.மீ அளவில் வெட்டு காயம் காணப்பட்டது.

அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு அவரை உள்நோயாளியாக சிகிட்சை மேற்க்கொள்ள அறிவுறித்தினேன்.

9.கடந்த 15.06.2016 அன்று மருத்துவமனை சிகிட்சையில் இருந்து மருத்துவரின் அறிவுரை இல்லாமல் தானாக வெளியில் சென்று விட்டார். அதனால் அவருக்கு காயசான்று வழுங்க இயலவில்லை. **அவருக்கு வழுங்கிய விபத்து பதிவெடு அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

10.இதற்கு முன்பாக TVMCH மருத்துவமனையில் அவசர சிகிட்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருக்கும்போது கடந்த 08.06.2016 ஆம் தேதி 04.20 மணியளவில் ஏரல், பண்டாரவிளையை சேர்ந்த நாராயணன் மனைவி முத்துகனி என்பவரை என்னிடம் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிட்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் என்னிடம் கூறியதாவது கடந்த 08.06.2016 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் குரங்கனி அம்மன் கோவில் அருகில் வைத்து இருசக்கர வாகனத்தில் சென்றபோது கார் அடித்து விபத்து ஏற்பட்டதாக கூறினார்.

11.அவரை நான் பரிசோதிதத்தில அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது சுவாசமும் ,இதய துடிப்பும் சீராக இருந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் கீழ்கண்டவாறு

1.வலது காது பகுதியில் 04x3x0.5 செ.மீ அளவில் வெட்டு காயம் காணப்பட்டது.

2.அவரது வலது முகப்பகுதியில் 7x7 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. அவரது வலது தோள் பகுதியில் 8x6 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு அவரை உள்நோயாளியாக சிகிட்சை மேற்க்கொள்ள அறிவுறித்தினேன்.

12.கடந்த 08.06.2016 அன்று மருத்துவமனை சிகிட்சையில் இருந்து மருத்துவரின் அறிவுரைக்கு எதிராக தாமாக மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார். அதனால் அவருக்கு காய சான்று வழங்க இயலவில்லை. அவருக்கு **நான் வழங்கிய விபத்து பதிவேடு அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13. இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 01.12PM)**

1. காயம்ப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேராகவோ அல்லது முன்னால் சென்றுக்கொண்டிருக்கிற வாகனத்தை பின்னால் சென்று இடித்து அதனால் கீழே விழுந்ததால் ஏற்படக்கூடிய காயங்கள் என்றால் வாய்ப்புள்ளது.

2.நான் வழங்கிய 2 காயசான்றிதள்களில் எந்த காயம் கொடுங்காயம் என காயசான்றுகளில் துலங்காது என்று சொன்னால் சரிதான்.

**சாட்சியம் முடிந்த நேரம் 01.15PM**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.